அளவுக்குத் தண்ணீர் செல்ல முடியாமல், விவசாயம் பாதிக்கப் படுகிறது. எனவே இந்த வேலையை விரைவாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு கருத்தில் கொள்ளும். அதே நேரத்தில் விரைந்து பணியாற்ற அரசு நடவடிக்கையும் எடுக்கும்.

ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம்.

*974. திரு. ஏ. ஜி. சம்பத் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஒன்றியம், கண்டாச்சிபுரம் மேல்நிலைப் பள்ளியில் உள்ள அரசு இலவச ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், கண்டாச்சிபுரம் ஆதிதிராவிடர் நலவிடுதி ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இந்த விடுதிக்கு கட்டிடம் கட்ட தேவையான இடவசதி உள்ளது. இருந்தபோதிலும் நிதிவசதிக்கேற்ப வரும் நிதியாண்டில் இவ்விடுதிக்கு கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆதிதிராவிடர் நல ஆலோசணைக்குழு.

*1564. திரு. ஆர். அண்ணாநம்பி :

திரு. ஏ. தங்கராஜு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழு மீண்டும் அமைக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாநில மற்றும் மாவட்ட அளவிலான் ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பது குறித்து நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் ஆதி திராவிட மக்களுக்குப் புதிய சலுகை அளிக்க வேண்டுகிறேன். சமீபத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவீத ஒதுக்கீடு என்றும் இன்னும் பல்வேறு சலுகைகளை அரசு அறிவித்தது. அதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. மகிழ்ச்சிதான். ஆனால் அதே நேரத்தில் ஆதிதிராவிட மக்களுக்கான ஒதுக்கீட்டை 25 சதவீதமாக உயர்த்திடும் சலுகையை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆதி திராவிடர்களுக்கு 16 சதவீதம் என்றுதான் இருந்தது. அதை முன்பிருந்த கழக ஆட்சி, முன்பே 18 சதவீதமாக உயர்த்தியிருக்கிறது. எனவே, இந்தியா முழுவதும் அதே சதவீதத்தில்தான் இப்போது ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. ஏ. தங்கராஜு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே 15 ஆண்டுக் காலமாக வேண்டுகோள் விடுத்தும் செயல்படாமல் இருப்பது உண்மைதானா? இனியாவது இதை நிறைவேற்றும் என்று நம்பலாமா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கேள்வியை விளக்கமாகக் கேட்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கமாகவா? உங்களுக்குக் காதில் கேட்கும்படியா? திரு. தங்கராஜு அவர்கள் மீண்டும் கேட்கலாம்.

திரு. ஏ. தங்கராஜு : மாண்புமிகு தலைவர் அவர்களே, 15 ஆண்டுக் காலமாக இந்த மாமன்றத்திலே இந்த வேண்டுகோள் விடுத்தும், செயல்படாமல் இருப்பது உண்மைதானா? இனியாவது இம்மாமன்றம் நிறைவேற்றும் என்று நம்பலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைத் தலைவர் மொழி பெயர்க்கிறார். 15 ஆண்டுக் காலமாக இதுபோன்ற குறிப்புக் கொடுத்தும் இதுவரை செயல்படுத்தப்படாமல் இருக்கிறதே, இனியாவது செயல்படுத்தப்படுமா என்று கேட்கிறார்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதிலே 14 ஆண்டு காலத்திற்கு நாங்கள் பொறுப்பல்ல. (சிரிப்பு).

மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு வேலை.

*455. **திரு. எம். சீரங்கன் :**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு வேலை வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வேலை வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு இதுவரை நிலம் கொடுத்த நபர்களில் 289 குடும்பங்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

10-15 மணி

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேட்டூரில் அனல் மின்சார நிலையம் கட்டுவதற்காக அங்கு சாகுபடி செய்து கொண்டிருந்த விவசாயிகளிடத்திலிருந்து நிலங்களை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு பட்டாதாரருக்கும், அதாவது யார் சாகுபடி செய்து கொண்டு இருந்தார்களோ அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுப்பது என்ற ஒப்பந்தத்தின் பேரில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் நிலம் எடுக்கப்பட்டவர்களில் 315 பேர்களுக்குக் கடைசியாக வேலை கொடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு முதல்வர் மேட்டூர் வந்தபோது தெரிவிக்கப்பட்டது. முதல்வரவர்கள் அவர்களுக்கும் வேலை கொடுப்பதாக அறிவித்தார்கள். அதன் பிறகு இன்று வரை 80 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டு இருக்கின்றது. மீதிப் பேர்களுக்கு பல்வேறு காரணங்களைச் சொல்லி காலம் கடத்திக்கொண்டு இருக்கின்றார்கள். அரசினிடத்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் பல்வேறு முறைகள் இது சம்பந்தமாக விளக்கங்கள் சொல்லி ஆகிவிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த விவரங்களோடு யார் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர் என்ற பட்டியல் அனுப்பி இருக்கிறார். அந்தப் பட்டியலின் அடிப்படையில் யார் உரிமையாளர்கள் என்பதைப் பார்த்து வேலை கொடுப்பதற்குப் பதிலாக, அந்தப்